[திரு. துரைமுத்துசாமி] [1979 ஏப்ரல் 25

விதிக்கப்பட்டிருப்பதைப் போல அரிசி வாங்கினால் அதையும் 3 மாதங்களுக்குள்ளாக உபயோகப்படுத்திவிட வேண்டும் என்ற ஆணையைப் பிறப்பிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு பி. டி. சரஸ்வதி: தலைவரவர்களே, அது பற்றித் தனிக் கேள்வி போட்டால் முழு விவரத்தையும் அதாவது தேவையான பொருட்கள் எங்கெங்கிருந்து வருகின்றது. எப்படி சப்ளை செய்யப்படுகிறது என்பதைத் தெரிவிக்கத் தயாராக இருக்கின்றேன்,

(5) தகவல் கோரல்.

உறுப்பினர்கள் கொடுத்த அறிவிப்புகள் எடுத்துக் கொள்வது குறித்து.

திரு. கே. சௌந்திரராசன்: பாயின்ட் ஆப் ஆர்டர், பேரவைத் தலைவரவர்களே, திருச்சியிலே தண்ணீர் தட்டுப்பாடு அதிகமாக இருப்பதால் அங்குள்ள மக்கள் அவதிப்படுகிறார்கள் என்பது குறித்து விதி 44-ன் கீழ் ஒரு தீர்மானத்தைக் கொடுத்து இருந்தேன். அது எப்போது எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதை எல்லாம் என்னுடைய அறையிலே வந்து கேளுங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவரவர்களே, வரலாற்று புத்தகத்தில் நபிகள் நாயகத்தைப்பற்றி தரக்குறைவாக எழுதி இருக்கிறார்கள் என்பது குறித்து ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்தேன்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை நாளைக்கு எடுத்துக்கொள்கிறேன். அடுத்து இப்போது மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள்.

(6) அறிவிப்புகள்.

(அ) கூட்டுறவு நிலவள வங்கிகள் (திருத்த) சட்ட முன் வடிவு, 1979.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கூட்டுறவு நிலவள வங்கிகள் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்வதற்கும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கும் ஆளுநர் அவர்கள் தனது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(5) தகவல் கோரல்—(தொடர்ச்சி)

உறுப்பினர் கொடுத்த அறிவிப்புகள் எடுத்துக் கொள்வது குறித்து:

திரு. கே. பண்ணை சேதுராப் : பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு 41-வது விதியின்கீழ் கவன ஈர்ப்பு தீர்மானம் ஒன்றை திரு. ஏ. ஏகாம்பர செட்டியார், எம்.எல்.ஏ. அவர்கள் கொடுத்திருப்பதாக எங்களுக்கு அச்சிடப்பட்டு தாள்கள் விநியோகிக்கப்பட்டிருக்கின்றன. அந்த ஏகாம்பரச் செட்டியார் அவர்கள் இந்த அவைக்கு எப்போது தேர்ந்தெடுக்கப் பட்டார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது ஒரு பிழையாக இருக்கலாம். அதைப் பெரிது படுத்தக் கூடாது. ஒரு பெரிய பிரச்னை அல்ல.

(7) அரசினர் சட்ட முன்வடிவுகள்—(தொடர்ச்சி)

(ஏ) நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு, 1979 தொடர்ச்சி).

*திரு. து. இராமசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தமிழகத்தில் விவசாயிகளுடைய பிரச்னை பெரும் பிரச்னையாக இருப்பதை ஏற்கெனவே இந்த அவையில் பலமுறை எடுத்துக் கூறியிருக்கிறோம். இருப்பினும் நேற்று முன் தினம் நடந்த நிகழ்ச்சிகளைக் காண்கிற நேரத்தில் அதை வலியுறுத்திக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். விவசாயிகளைப் பொறுத்த வரையில் 80 சதவிகித மக்கள் இந்த தமிழகத்தில் விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். இப்போது 80 சதவிகித மக்கள் வறுமையால் வாடுகின்றதை நாம் இன்றைக்குக் காண முடிகிறது. இன்று அவர்கள் நாட்டுக்கு உணவு அளிக்கக் கூடிய சமுதாயமாக இருந்தாலும் இந்த நாட்டின் முதுகெலும்பாக இருந்தாலும், அவர்கள் வறுமையைப் போக்குவதில் மெத்தனமாக இருக்கிறோம் என்று கூறுவது மிகையாகாது. இன்று சாதாரணமாக நகரங்களில் சிறுதொழில்களை ஆரம்பித்தவர் பிறகு பெரிய தொழிற்சாலைக்கு அதிபராக ஆகியிருப்பதை நாம் காண்கிறோம். ஆனால் 10 ஆண்டுகளுக்கு முன்பு 50 ஏக்கருக்கு உரிமையாளராக இருந்தவர், இன்றைக்கு 5 ஏக்கருக்கு உரிமையாளராக ஆகும் அவல நிலையைத்தான் காண முடிகிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் தலைமை)

ஆக, ஒவ்வொரு ஆண்டும் விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் அவர்களுடைய உடமைகளை எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக விற்று அதைக் கொண்டு அவர்களுடைய வாழ்க்கையை நடத்திக் கொண்டிருப்பதை நாம் காண்கிறோம். ஆகவே விவரம் அறியாத அவர்கள் திசை தெரியாமல் அவதிப்பட்டுக்